தினமணி

**காலத்துக்கு ஏற்ற தொடர் காய்கறி சாகுபடி**

First Published : 20 Oct 2011 12:59:15 AM IST





விழுப்புரம்: எந்தெந்த மாதத்தில் என்னென்ன காய்கறிகள் பயிரிட்டால் அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் ஈட்டலாம் என்பது குறித்து விழுப்புரம் மாவட்ட தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் விளக்கியுள்ளனர்.

நமது அன்றாட வாழ்வில் முக்கிய பங்கு காய்கறிகள் வகிக்கிறது. பெரியவர்களுக்கு 85 கிராம் பழமும், 300 கிராம் காய்கறிகளும் அன்றாடம் தேவை என ஆய்வுகள் கூறுகின்றன. தற்சமயம் உற்பத்தியாகும் காய்கறிகள் பெரியவர்களுக்கு சராசரியாக 220 கிராம் மட்டுமே கிடைக்கக் கூடியதாக உள்ளது.

காய்கறிகள் சாகுபடி குறுகிய காலத்தில் அதிக மகசூல் மற்றும் அதிக வருமானம் தரக்கூடியதாக உள்ளதால், வர்த்தக ரீதியில் காய்கறி சாகுபடி செய்வது தற்போதைய தேவையாக உள்ளது. வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப காய்கறிகள் உற்பத்தியினை அதிகப்படுத்துவது அவசியமாகிறது.

இந்த சூழலில் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பருவத்தே காய்கறிகள் சாகுபடி செய்ய அதற்கேற்ற பருவங்களையும் மாதங்களையும் அறிந்து கொள்வது அவசியமாக உள்ளது. காய்கறிகளில் சாதாரண ரகங்கள் சாகுபடிக்கு கீழ்கண்டவாறு பருவங்களும் மாதங்களும் முன்னர் கடைபிடிக்கப்பட்டது.

தைப்பட்டம்: (டிசம்பர்-ஜனவரி) மாதத்தில் கத்தரி, பூசணி, புடல், பீர்க்கன்.

மாசிப்பட்டம்: (பிப்ரவரி, மார்ச்) மாதங்களில் தக்காளி, வெண்டை, காராமணி, மிளகாய், பூசணி, புடல், பீர்க்கன்,

வெள்ளரி,

ஆடிப்பட்டம்: (ஜூன், ஜூலை) மாதங்களில் தக்காளி, வெண்டை, காராமணி, மிளகாய், பூசணி, புடல், பீர்க்கன், வெள்ளரி என அந்தந்த பட்டங்களில் அதற்குரிய காய்கறிகளை விவசாயிகள் பயிரிட்டு வந்தனர்.

தற்சமயம் வீரிய ஒட்டுரக காய்கறிகள் அறிமுகமான பின்னர், என்னவகையான காய்கறிகளை சாகுபடிக்கு தேர்ந்தெடுக்கலாம் என்பது குறித்து கோலியனூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் க. வீராசாமி கூறியது:

ஜனவரி: (மார்கழி, தை) கத்தரி, மிளகாய், பாகல், தக்காளி, பூசணி, சுரை, முள்ளங்கி, கீரைகள்.

பிப்ரவரி: (தை,மாசி) கத்தரி, தக்காளி, மிளகாய், பாகல், வெண்டை, சுரை, கொத்தவரை, பீர்க்கன், கீரைகள், கோவைக்காய்.

மார்ச்: (மாசி, பங்குனி) வெண்டை, பாகல், தக்காளி, கோவை, கொத்தவரை, பீர்க்கன்.

ஏப்ரல்: (பங்குனி, சித்திரை) செடி முருங்கை, கொத்தவரை, வெண்டை. மே: (சித்திரை, வைகாசி) செடி முருங்கை, கத்தரி, தக்காளி, கொத்தவரை.

ஜூன்: (வைகாசி, ஆனி) கத்தரி, தக்காளி, கோவை, பூசணி, கீரைகள், வெண்டை. ஜூலை: (ஆனி, ஆடி) மிளகாய், பாகல், சுரை, பூசணி, பீர்க்கன், முள்ளங்கி, வெண்டை, கொத்தவரை, தக்காளி.

ஆகஸ்ட்: (ஆடி, ஆவணி) முள்ளங்கி, பீர்க்கன், பாகல், மிளகாய், வெண்டை, சுரை. செப்டம்பர்: (ஆவணி, புரட்டாசி) செடிமுருங்கை, கத்தரி, முள்ளங்கி, கீரை, பீர்க்கன், பூசணி.

அக்டோபர்: (புரட்டாசி, ஐப்பசி) செடிமுருங்கை, கத்தரி, முள்ளங்கி.

நவம்பர்: (ஐப்பசி, கார்த்திகை) செடிமுருங்கை, கத்தரி, தக்காளி, முள்ளங்கி, பூசணி.

டிசம்பர்: (கார்த்திகை, மார்கழி) கத்தரி, சுரை, தக்காளி, பூசணி, முள்ளங்கி, மிளகாய் ஆகிய காய்கறிகளை பயிரிடலாம்.

இங்கு குறிப்பிட்டவைகளில் அந்த காலகட்டத்தில் எந்த காய்கறிக்கு மார்க்கெட் விலை அதிமகமாக உள்ளது என்பதை அறிந்து பயிரிட்டால் கூடுதல் லாபம் பெறலாம் என்றார் வீராசாமி.

இது குறித்து தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் என். பன்னீர்செல்வம் கூறியது:

காற்கறிகள் மனிதர்களுக்கு சரிவிகித உணவு அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அவை சுறுசுறுப்பான வாழ்க்கைக்கு உதவும் உயிர் சத்துக்கள், தாது உப்புக்கள், நார் சத்துக்களை வழங்குவதுடன் சக்திக்கு தேவைப்படும் மாவுச் சத்துக்களையும் அதிகமான அளவில் வழங்குகிறது. எனவே மாதவாரியான உள்நாடு மற்றும் வெளிநாடு சந்தைத் தேவையினை கருத்தில் கொண்டும், அதிக லாபம் பெறும் நோக்கத்தில் மாதாந்திர காய்கறிகளின் விலை விவரத்தினை அறிந்தும் பயிரிட வேண்டும்.

தோட்டக்கலைத் துறையில் உள்ள துல்லிய பண்ணைத் திட்டத்தின் கீழ் 65 சதவீத மானிய விலையில் சொட்டு நீர்ப்பாசன உதவிகள் மற்றும் ரூ. 15,000 மதிப்பில் நீரில் கரையும் உரம் ஆகிய இடுபொருள்களுக்கான மானிய உதவிகளைப் பெற்று காய்கறி சாகுபடி செய்ய முன்வருமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் துறை மூலமாக உதவிகளைப் பெற்று சீரிய முறையில் காய்கறி உற்பத்தி செய்ய தங்கள் ஒன்றியத்திலுள்ள தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர்களை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம் என்று பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

**காளானின் மருத்துவ குணங்களும், பயன்களும்**

First Published : 20 Oct 2011 12:57:42 AM IST



பெரம்பலூர்: காளான் வளர்ப்பு மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் சி. சங்கர் கூறியது:

காளான்கள், பொதுவாக மழைக்காலத்தில் விளை நிலத்திலும், கள்ளி வேலிக்கு அருகிலும், மக்கிய மரம் குப்பைகளிலிருந்து கூட்டம், கூட்டமாக வளர்ந்து காணப்படும். இந்தப் பகுதிகளில் இயற்கையாகவே காளான் வித்துகள் வளர்ந்து, காளான்களாக வெளியே தோன்றும். இந்த வகைக் காளான்களை, அரிசிக் காளான் என்று கிராமப் பகுதிகளில் அழைப்பதுண்டு. இத்தகைய காளான்களை குழம்பு வைத்துச் சாப்பிடலாம். இவை குளிர் காலங்களில் மட்டுமே கிடைக்கும்.

அறிவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களால், தற்போது உணவுக் காளான்களை செயற்கை முறையில் வீடுகள், குடில்கள், ஆய்வுக் கூடங்கள், ஆராய்ச்சி மையங்கள் உள்ளிட்ட இடங்களில் அதிகளவில் உற்பத்தி செய்து, ஒரு தொழிலாக மேற்கொண்டு, குறைந்த காலத்தில் அதிக லாபம் பெறுகிறார்கள்.

குளிர்ப் பகுதிகளில் வெண் மொட்டுக் காளானும், வெப்பப் பகுதியில் சிப்பிக் காளான், பால் காளான், நெல் வைக்கோல் காளானும் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. இந்தக் காளான்களை பக்குவப்படுத்தி பல்வேறு விதமான உணவு வகைகளாகத் தயாரித்து உண்ணலாம். அவை, நமது உடலுக்கு சக்தியைத் தருவதோடு புரதம், வைட்டமின்கள், தாதுப்பொருள்களை அளிக்கிறது.

காளான், சர்க்கரை நோய்க்கு ஒரு சிறந்த மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. இதில், கொழுப்புச் சத்து மிக, மிகக் குறைவு. எனவே, தற்போதுள்ள தட்ப, வெட்ப சூழ்நிலையின் காரணமாக, அனைவருமே காளானை உள்கொண்டால், நோயின்றி நீண்ட நாள் வாழலாம்.

மருந்துகளாகப் பயன்படும் காளான்கள்: அகாரிகஸ் கேம்பஸ் டிரிஸ், பிளாமுளினா வேலுடி பெஸ், லெண்டினஸ் எடோடஸ், கார்ட்டினெல்லெஸ் ஷிட்டேக், கோப்பரைனஸ் கொமேட்டஸ், கல்வேஷியா ஜெய்ஜான்டியா, போரியோலஸ் வெர்சிகலர்ஸ், பாலிபோரஸ் உள்ளிட்ட காளான் இனங்கள், மருந்துகள் தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றன.

மருத்துவக் குணங்கள்: பாக்டீரியா நோய்கள், பூஞ்சாண நோய்கள், புற்று நோய்கள், இன்புளுயன்ஸô காய்ச்சல், சுரப்பிகளின் வீக்கம், நரம்புக் கோளாறு, காக்காய் வலிப்பு, மூளை நோய், வலிமை குறைவு, தாம்பத்திய உறவுக்கு, முதுமை குறைவு, காய்ச்சல், நீரிழிவு நோய், எய்ட்ஸ், பேதி, பித்த சுரப்பி கோளாறு நோய்கள், குடல் கோளாறு, காது வலி, மஞ்சள் காமாலை, மூட்டு வலி, நீர்க்கோர்த்தல் உள்ளிட்ட நோய்களைக் காளான் கட்டுப்படுத்துகிறது.

காளான் வளர்ப்பின் பயன்கள்: வேளாண்மையைச் சார்ந்த ஒரு துணைத் தொழில். இது சுவைமிக்க, மணம் மிகுந்த உணவுப் பொருள். புரதம் மற்றும் நார்ச் சத்து நிறைந்த, மாவுச் சத்து மற்றும் கொழுப்புச் சத்து குறைந்த ஒரு மருந்துப் பொருள்.

பண்ணைக் கழிவுகளை பணமாக்க உதவும். குறைந்த பரப்பளவில், குறைந்த முதலீட்டில் நிறைந்த நிகர லாபம் தரும் தொழில். பயிர் சாகுபடி செய்யாத காலங்களில் வருவாயை ஈட்டித் தரும் ஒரு தொழில். சிறந்த எருப்பொருள், மகளிருக்கு ஏற்ற சுய தொழில் மற்றும் நோயாளிகளுக்கு உகந்த உன்னத உணவுப் பொருளாகப் பயன்படுகிறது.

எனவே, படித்த இளைஞர்கள், மாணவிகள், சுய தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், விவசாயிகள், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தோர் வேளாண் அறிவியல் மையங்களைத் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்றார்.

**அதிக விளைச்சல்: மார்க்கெட்டில் குவிந்த சாமந்தி, ரோஜா**

First Published : 20 Oct 2011 05:04:24 AM IST
Last Updated : 20 Oct 2011 05:41:24 AM IST




புதுச்சேரி பெரிய மார்க்கெட் பகுதியில் விற்பனைக்காக குவிந்த பட் ரோஜா பூ. (வலதுபடம்) சாமந்திப் பூ.

புதுச்சேரி, அக். 19: ஒசூர் மற்றும் சுற்றுபகுதிகளில் சாமந்தி, ரோஜா பூக்களின் விளைச்சல் அதிகமாக இருக்கிறது. இதையொட்டி இப்பூக்களின் விலை குறைந்ததால் புதுச்சேரி மார்க்கெட்டில் இந்தப் பூக்கள் குவிக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரி மார்க்கெட்டுக்கு ஒசூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள ராயக்கோட்டை, பாலனப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அதிக அளவில் பூக்கள் தினந்தோறும் புதுச்சேரிக்கு வருகின்றன. ஒரு சில பூக்கள் சேலம் பகுதியில் இருந்து இங்கு வருகின்றன. சாமந்தி பூவில் சிகப்பு மற்றும் மஞ்சள் நிறத்தில் உள்ள பூக்கள் அதிகம் கண்ணைப் பளிச்சிடுகின்றன.

ஆயுத பூஜையின் போது மார்க்கெட்டில் அனைத்துப் பூக்களுக்கும் தேவை அதிகரித்ததால் அவை கிடைக்காத சூழ்நிலை இருந்தது. பின்னர் படிப்படியாக பூ வரத்து அதிகரித்து வந்தது. இந்நிலையில் புதுச்சேரி மார்க்கெட்டில் புதன்கிழமை அதிக அளவில் பூ வரத்து இருந்தது.

இது குறித்து புதுச்சேரி பெரிய மார்க்கெட்டில் புஷ்ப கமிஷன் மண்டி நடத்தும் என். ரவியிடம் கேட்டபோது அவர் கூறியது:

பூ சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் சாமந்தி, ரோஜா, சம்பங்கி உள்ளிட்ட பூக்கள் அதிகமாக விளைந்ததால் இதை விற்பனை செய்து கொடுக்குமாறு அதிக அளவில் புதுச்சேரி பகுதிக்கு அனுப்பி வைக்கின்றனர்.

எப்போதும் இல்லாத அளவுக்கு பெரிய சாமந்தி பூ கிலோ ரூ.40-க்கு விற்பனை செய்கிறோம். ஒரு சில நாள்கள் மட்டும்தான் இது நீடிக்கும். தீபாவளி பண்டிகை நெருங்குவதால் கண்டிப்பாக இந்தப் பூக்களின் விலையும் உயரும் என்றார்.

பெரிய மார்க்கெட்டுக்கு வெளியே பூ வியாபாரம் செய்து வரும் ஐ. விநாயகம் கூறியது: எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமாக சாமந்தி பூ இப்போது புதுச்சேரிக்கு வந்திருக்கிறது. விளைச்சல் அதிகமாக இருப்பதால்தான் எங்கள் கடையில் இப்படி குவித்திருக்கிறோம்.

பூ ஒரு நாள் வியாபாரம்தான். அதற்குப் பிறகு அதை வைத்திருக்க முடியாது. அதனால்தான் குறைந்த விலையில் இப்போது இந்தப் பூவை விற்பனை செய்கிறோம். சிறிய ரக மஞ்சள் நிற சாமந்தி பூ கிலோ ரூ.20-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இது இதுவரை கிலோ ரூ.80 அளவில் விற்பனை செய்யப்பட்டது. இப்போது சம்பங்கி பூவும் விளைச்சல் அதிகம். இந்தப் பூ இப்போது கிலோ ரூ.15, ரூ10 என்ற அளவில் விற்பனை செய்யப்படுகிறது. இது முகூர்த்த நாள்களில் கிலோ ரூ.200 வரை விற்பனையாகும். ரோஜா கிலோ ஒன்றுக்கு ரூ.40 என்ற அளவில் விற்பனை செய்கிறோம். இப்போது ரோஜா விளைச்சல் அதிகம். அதனால் புதுச்சேரிக்கு ரோஜா பூ வரத்து அதிகம் உள்ளது. மற்ற நாள்களில் கிலோ ரூ.160 முதல் ரூ.200 வரை விற்பனை நடந்து வந்தது.

மல்லி, முல்லை பூக்கள் சீசன் இப்போது சீசன் முடியும் நிலையில் உள்ளது. அதனால் முல்லை பூ கிலோ ரூ.140, ரூ.160 என்ற அளவில் விற்பனை செய்யப்படுகிறது. மல்லி கிலோ ரூ.200, ரூ.240 அளவில் விற்பனை செய்யப்படுகிறது என்றார்.

**வடகிழக்குப் பருவமழை எப்போது?**

First Published : 20 Oct 2011 02:55:00 AM IST

சென்னை, அக்.19: வடகிழக்குப் பருவமழை அடுத்த வாரத்தில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கமாக அக்டோபர் 20-ம் தேதியையொட்டி பருவமழை தொடங்கும். வங்கக் கடலில் உருவாகியுள்ள தீவிர காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, பருவமழைத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மைய வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழகத்துக்கு அதிக மழைப்பொழிவை அளிப்பது வடகிழக்குப் பருவமழை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை அக்டோபர் 29-ம் தேதி தொடங்கி டிசம்பர் முதல் வாரம் வரை நீடித்தது.

முடிவுக்கு வந்தது தென்மேற்கு பருவமழை: நாடு முழுவதும் தென் மேற்கு பருவமழை முடிவுக்கு வந்துள்ளதாக இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை காலமான ஜூன் முதல் செப்டம்பர் வரை நாடு முழுவதும் இந்த ஆண்டு சராசரி மழையளவை (887 மில்லிமீட்டர்) விட சற்று அதிகமாக 899 மில்லிமீட்டர் (101 சதவீதம்) மழை பதிவாகியுள்ளது. கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழையின் மூலம் நாடு முழுவதும் 910 மில்லிமீட்டர் மழை பதிவானது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் 298 மில்லிமீட்டர் மழை: தமிழகத்தில் சராசரியாக 298 மில்லிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. இது சராசரி மழையளவான 317 மில்லிமீட்டரை விட குறைவு.

நாட்டிலேயே அதிக அளவாக கோவா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 3775 மில்லிட்டர் மழை பதிவாகியுள்ளது. மும்பை மற்றும் அதையொட்டியுள்ள பகுதியில் 3716 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. கேரளத்தில் சராசரி மழையளவை விட சற்று அதிகமாக 2215 மில்லிமீட்டர்

மழை பதிவாகியுள்ளது. வழக்கமாக ஜூன் 1-ம் தேதிக்கு பதில், இந்த ஆண்டு மூன்று நாள்களுக்கு முன்னதாக மே 29-ம் தேதியே கேரளத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கியது.

செப்டம்பர் கடைசி வாரத்தில் தொடங்கி, அக்டோபர் முதல் வாரத்தில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பருவமழை முடிவுக்கு வந்துள்ளது. இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி இந்தியா முழுவதும் பதிவான மழையளவு விவரம் (அளவு மில்லிமீட்டரில்):

இந்தியா முழுவதும் - 899 (சராசரி 887)

வடமேற்கு இந்தியா - 654 (615)

மத்திய இந்தியா - 1073 (975)

தெற்கு இந்தியா - 715 (715)

வடகிழக்கு இந்தியா - 1233 (1438)

அருணாச்சலப் பிரதேசம், அசாம், மேகாலயம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை வழக்கத்தைவிட குறைவாகவே பதிவாகியுள்ளது. இந்தப் பகுதிகளில் வழக்கமான மழையளவில் 86 சதவீதமே இந்த ஆண்டு பதிவாகியுள்ளது.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 20 Oct 2011 02:55:19 AM IST

சென்னை, அக்.19: தமிழகம் மற்றும் புதுவையில் வியாழக்கிழமை மழைபெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் புதன்கிழமை பரவலாக மழை பெய்தது. மதுரை மாவட்டம் மேட்டுப்பட்டியில் மாநிலத்திலேயே அதிக அளவாக 70 மில்லி மீட்டர் மழை பதிவானது. மாநிலம் முழுவதும் பதிவான மழையளவு விவரம் (அளவு மில்லி மீட்டரில்): தாம்பரம், சிவகிரி, வால்பாறை, மதுரை, திண்டுக்கல் 40; ஸ்ரீபெரும்புதூர், செம்பரம்பாக்கம், சத்தியமங்கலம், மருங்காபுரி 30; பூந்தமல்லி, கழுகு மலை, திருப்பூர், உடுமலைப்பேட்டை, மணப்பாறை, உத்தமபாளையம் 20; பொள்ளாச்சி, பாளையங்கோட்டை, சங்கரன்கோயில், விளாத்திக்குளம் 10.

சென்னையில்.. சென்னையில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கரையைக் கடக்கும்: வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை புதன்கிழமை இரவு வங்கதேசம் அருகே கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மீனவர்களுக்கு எச்சரிக்கை: வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக, சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் ஒன்றாம் எண் கொண்ட கொடி ஏற்றப்பட்டுள்ளது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**பயறு வகை அறுவடைக்கு பின் தொழில்நுட்பம்: வேளாண் வணிக துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2011,02:21 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பயறு வகை பயிர்கள் அறுவடைக்கு பின் பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண் வணிக துறை துணை இயக்குனர் செல்வம் அறிவுரை வழங்கியுள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 500 ஏக்கரில் உளுந்து, காராமணி, பாசிப்பயறு, மொச்சை, துவரை ஆகிய பயிர்வகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. பயறு வகை பயிர்களில் கூடுதல் வருவாய் பெற தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து அதிக லாபம் பெறலாம்.

உளுந்து, பாசிப்பயறு, துவரை மற்றும் தட்டைபயறு ஆகிய பயறு வகைகள் 85 சதவீதம் பருப்பு அளவு கூடுதல் விலையில் பெற்றிட பின் வரும் நேர்த்தி முறைகளை கடைப்பிடிக்க வேண்டும். பயிறு வகை காய்கள் நெற்றுக்காளாக மாறியும், இலைகள் பழுத்து உதிர ஆரம்பிக்கும் போது அறுவடை செய்ய வேண்டும். நெற்றுக்கள் காப்பிகெட்டை நிறமாகி இருந்தால், நெற்றுக்களை பிரித்து எடுக்க வேண்டும்.செடிகளில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட நெற்றுக்களை காய வைத்து விதைகளை பிரித்து எடுத்து சுத்தம் செய்ய வேண்டும். பிரித்து எடுத்து விதைகளில் கலந்துள்ள கல், மண், தூசி மற்றும் சருகுகள், முதிராத விதைகள், பூச்சி நோய் தாக்கிய விதைகள், உடைந்த விதைகள் இவைகள் தனியாக நீக்கி விட வேண்டும்.விதைகளில் ஈரப்பதம் 12 சதவீதத்துக்குள் இருக்குமாறு நன்கு காய வைக்க வேண்டும். உணவுக்காக நீண்ட நாட்கள் சேமிக்க, விதைகளை வெயிலில் காய் வைத்து பின் ஒரு கிலோ விதைக்கு ஐந்து மில்லி நல்லெண்ணெய் தடவி நிழலில்

உலர விட்டு சேமிக்கலாம். துவரை விதைகள் செம்மண் தடவி காய வைத்து சேமிக்கலாம். பயறு வகை விதைகள் ஸ்பெஷல் நல்லது சுமார் மற்றும் சாதாரணம் என நான்கு தரங்களாக பிரித்து கூடுதல் லாபம் பெறலாம்.

**உரங்களின் விலை உயர்ந்தது**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2011,23:07 IST

ராஜபாளையம் : பருவமழை துவங்கினாலும், உரங்களின்விலை ஏற்றத்தால் விவசாயம் கேள்விக்குறியாக உள்ளது. ராஜபாளையம்மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் தென்னை, நெல், கரும்பு விவசாயம் நடக்கிறது. இயற்கை உரம் இடும் சில விவசாயிகளும், ரசாயன உரம் பயன்படுத்துகின்றனர். விவசாயத்திற்கு தேவையான டி.ஏ.பி., பொட்டாஷ், சூப்பர் போன்ற ரசாயன உர விலை நாளுக்குள் நாள் உயர்கிறது. கடந்த மாதம் 480 ரூபாய்க்கு விற்ற டி.ஏ.பி., மூடை, தற்போது 950 ரூபாயாக உயர்ந்து உள்ளது. 40 நாளுக்கு முன் 230 ரூபாய்க்கு விற்ற பொட்டாஷ் மூடை 550 ரூபாயாக உள்ளது. மற்ற உரங்களின் விலை இரட்டிப்பாக உயர்ந்தாலும், யூரியா விலை மட்டும் 266 ரூபாயில் இருந்து 280 ஆக மட்டும் உயர்ந்து உள்ளது. தமிழக விவசாய சங்க செயலார் முருகேசன் கூறுகையில், ""முன்பு விலை ஏற்றம் குறித்து அரசு அதிகாரிகள் தகவல் கொடுப்பர். இப்போது கடைகளுக்கு சென்றால் தான் விலை ஏற்றம் தெரிகிறது. உர மூடைகளுக்கு மத்திய அரசு மானியம் கொடுத்தது. தற்போது மறைமுகமாக மானியத்தை விலக்கியது தான் இந்த விலை உயர்வுக்கு காரணம். இதில் குறைந்தவிலையில் போலி உரங்களும் வர துவங்கும். போலிகளால் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. விவசாய உற்பத்தியும் பாதிக்கும்," என்றார்.

---

உர நிறுவனங்களிடம் எஞ்சியிருக்கும் ரூ.1,947 கோடி கடன்பத்திரங்களை மத்திய அரசு திரும்ப வாங்குகிறது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
உர நிறுவனங்களிடம் எஞ்சி நிற்கும் ரூ.1,947.37 கோடி மதிப்பிற்கான கடன்பத்திரங்களை திரும்ப வாங்கிக் கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

அடக்க விலை

இந்நிறுவனங்கள் விவசாயிகளுக்கு உரங்களை மத்திய அரசு நிர்ணயம் செய்த விலையில் விற்பனை செய்கின்றன. இவை அடக்க விலைக்கும் குறைவாக இருப்பதால், இந்நிறுவனங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இதனை ஈடுகட்டும் வகையில், மத்திய அரசு உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கி வருகிறது.
இதன் அடிப்படையில், மத்திய அரசு, உர நிறுவனங்களுக்கு ரூ.27,500 கோடி மதிப்பிற்கு கடன்பத்திரங்களை வழங்கியது. இந்த கடன்பத்திரங்களை விற்பனை செய்து பணம் திரட்டுவதில் உர நிறுவனங்களுக்கு காலதாமதம் ஏற்பட்டதால், இதில் ரூ.25,552 கோடி மதிப்பிற்கான கடன்பத்திரங்களை மத்திய அரசு ஏற்கனவே திரும்ப வாங்கிக் கொண்டது.
கடன்பத்திரங்களை திரும்ப வாங்கும் ரிசர்வ் வங்கியின் நடவடிக்கைகளால் உர நிறுவனங்களுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பான ரூ.1,781.88 கோடியில் 50 சதவீதத்தை (ரூ.890.94 கோடி) திரும்ப வழங்குவது குறித்து அமைச்சரவை செயலாளர்கள் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிகிறது.
உர நிறுவனங்கள் நாஃப்தா, பாறை பாஸ்பேட், பாஸ்போரிக் அமிலம் போன்ற மூலப்பொருள்களை அதிக விலை கொடுத்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதனால் இத்துறை நிறுவனங்களுக்கு பொதுவாகவே நிதி நெருக்கடி இருந்து வருகிறது. இந்நிலையில் கடன்பத்திரங்களை வங்கிகளில் ஈடாக வைத்து கடன் பெற முடியாத நிலையும் உள்ளது. ஏனென்றால் இந்த பத்திரங்களுக்கு வங்கிகளின் சட்டப்பூர்வ ஆயத்ததொகை இருப்பு அந்தஸ்து அளிக்கப்படவில்லை.

முதிர்வு காலம்

உர நிறுவனங்களின் முதலீட்டுச் செலவுகளுக்கு பணம் தேவைப்படுவதாலும், 18 ஆண்டுகள் முதிர்வு காலம் வரை காத்திருக்க இயலாத நிலை உள்ளதாலும், வெளிச்சந்தையில் இந்த கடன்பத்திரங்களை குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலை உள்ளது. இதுபோன்ற காரணங்களால், இவற்றை மத்திய அரசு திரும்ப வாங்குகிறது. இவ்வாறு கடன்பத்திரங்கள் திரும்ப வாங்கிக் கொள்ளப்படுவதால் உர நிறுவனங்களின் ரொக்க வரத்து உயர்ந்து நடைமுறை மூலதனம் அதிகரிக்கும்.

நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டுக்கான மத்திய அரசின் உர மானிய சுமை ரூ.53,589.87 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இச்செலவினம் மதிப்பீட்டை விஞ்சி ரூ.76,605.30 கோடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.